# 9ஆம் வகுப்பு:தமிழ்க்கற்றல் கையேடு :2025-26

**பலவுள் தெரிக.**

1.திணை,பால்,எண், ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிடமொழி எது?
**இ)மலையாளம்**

2.தமிழ்விடு தூது ----என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது. **இ.சிற்றிலக்கியம்**

3.பின்வருவனவற்றில் அளபெடை இடம்பெறாத தொடர் எது? **ஈ)ஓடி வா ஓடி வா**

4..காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்த காலமும் நிலையாய் இருப்பது தமிழே! – இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் யாவை?
**இ.மோனை , எதுகை, இயைபு**

5.<u>சிந்தா</u> மணி என்பதன் இலக்கணக்குறிப்பு–
**ஆ)ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்**

**குறுவினா**

**1.நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**

நாங்கள் பேசும் மொழி தமிழ் திராவிட மொழிகள் குடும்பத்தைச் சேர்ந்தது.

**2.தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் கவர்ந்த அடிகள் குறித்து எழுதுக.**

காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே!

–இவ்வடிகள் தமிழ் மொழி எல்லா மொழிக்கும் மூத்த மொழி என்கின்றது.

**3.கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

இரண்டு இரண்டு அடிகளை வைத்து எதுகையால் எழுதப்படும் செய்யுள் கண்ணி எனப்படும்.

**4. "அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்" இலக்கியங்களின் பாடுபொருளாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?**

அகமும் புறமும் இலக்கியங்களின் பாடுபொருள்.

**5.தென்திராவிடமொழிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.**

1.தமிழ் 2.மலையாளம் 3.கன்னடம் 4.குடகு

6.அளபெடை எத்தனை வகைப்படும்?அவை யாவை?

அளபெடை இரண்டு வகைப்படும்.1.உயிர் அளபெடை 2.ஒற்று அளபெடை

**சிறு வினா**

1.தமிழ்விடு தூது உணர்த்தும் தமிழின்சிறப்புகள் யாவை?

- முக்திக் கனியே!
- முத்தமிழே!அறிவால்உண்ணப்படும் தேனே!
- என் வேண்டுகோள் கேள்.
- புலவர்கள் குறவஞ்சி, பள்ளு பாடி சிறப்பு பெறுகின்றனர்.
- உனக்கும் மூவகைப் பாவினங்களுக்கும் உறவு உண்டா?
- ஒளி வீசும் மணியாய் இருக்கும் உன்னைச் சிந்து என்பவர் நா இற்று விழும்.

**2.திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

தென் திராவிட மொழிகள்,வட திராவிட மொழிகள் , நடுத்திராவிட மொழிகள் ஆகியவை திராவிட மொழிகளின் பிரிவுகள் ஆகும்

**தெரிந்த மொழி** : தமிழ்மொழி

**சிறப்பியல்புகள்:**

- தொன்மையான மொழி தமிழ்.
- பிறமொழித் தாக்கம் இல்லாத மொழி.

**3.மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

| | |
|---|---|
| மூணு – மலையாளம் | மூடு – தெலுங்கு |
| மூரு – கன்னடம் | மூஜி –துளு |

**4.'புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்' – உங்கள் பங்களிப்பை விளக்குக.**

1.புதிய கலைச்சொல்லாக்கத்தை உருவாக்குவேன்.
2.தமிழ் மருத்துவக்கலைக்களஞ்சியம் உருவாக்குவேன்.
3.கணினிச் சொற்களுக்குத் தமிழ்ச் சொல் உருவாக்குவேன்.

**நெடுவினா**

**1.காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப் பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.**

- மருத்துவம்,அறிவியல் ஆகிய துறைகளில் உள்ள கலைச்சொற்கள் தமிழில் மாற்றம் பெறுகின்றது.
- பிறமொழித் தாக்கம் குறைவாக உள்ளமொழி தமிழ் !
- சில மொழிகளுக்குத் தாயாகத் தமிழ் உள்ளது.
- ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் உள்ளன.
- புதிய தமிழ்ச் சொற்கள் தொடரந்து உருவாக்க முடியும்.

**2.புலம் பெயர்ந்த மனிதர்களின் அகத்திலும் புறத்திலும் எங்ஙனம் பாதிப்பு தெரிகின்றது என்பதை ஆறாம் திணை வாயிலாக விவரிக்க.**

**ஆறாம் திணை**

**முன்னுரை**

புலம் பெயர்ந்த மனிதர்களின் அகத்திலும் புறத்திலும் எங்ஙனம் பாதிப்பு தெரிகின்றது என்பதை ஆறாம் திணை வாயிலாகக் காண்போம்.

**முத்துலிங்கம்**

இலங்கையில் உள்நாட்டுப் போர் காலம் அது. அப்போது முத்துலிங்கத்தின் குடும்பம் அங்கு இருந்தது.எப்போதும் தூங்காது,உயிரை கையில் பிடித்துக் கொண்டு இருந்தனர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**அகதிகள் முகாம்**

- ❖ அனைவரும் அகதிகள் முகாமிற்குச் சென்றனர்.
- ❖ யாரோ போட்ட உடைகள்கைதிகளைப் போல வரிசையில் நின்று சாப்பாட்டிற்கு கை ஏந்துகின்றனர்.
- ❖ அங்கு இரண்டு கரண்டி தான் சோறு கிடைக்கும்.

**வேறு நாடு**

- ❖ உயிர் வாழ வேறு நாட்டிற்குச் சென்றனர்.
- ❖ 30வயதுள்ள புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்.பல நாடுகளில் சிறை,பனிச்சரிவு, அடி உதை அனுபவித்தார்.
- ❖ எங்கும் வேலை கிடைக்கவில்லை.8வது இடம் கேட்ட கேள்விக்கு,"இன்று வரைக்கும் உயிர் தப்பி வாழ்கிறேன் என்றால் அது என் திறமை " என்றார்.
- ❖ அவர் இப்போது வரை கனரக வாகனம் ஓட்டுகிறார்.

**முடிவுரை**

புலம் பெயர்ந்த மனிதர்களின் அகத்திலும் புறத்திலும் எங்ஙனம் பாதிப்பு தெரிகின்றது என் பதை ஆறாம் திணை வாயிலாகக் காண்போம்.

**கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக.**

இயல் -1

விடுகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத் தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில் ,புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே.
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

**திரண்ட கருத்து**

வானம், கடல், மலை. அருவி, புல்வெளி,வயல், விலங்கு, பறவை என அனைத்திலும் காணுகின்ற பாடலே! தூய்மை ஊற்றே! மக்கள் உள்ளத்தில் நிலையாக இருக்க வேண்டுகின்றேன்.

**பொருள் நயம்**

**தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே** என்பதில் பொருள் நயம் சிறப்பாக உள்ளது.

**சொல் நயம்**

**காட்டில்,புல்வெளியில்,நல்வயலில்** ஆகிய சொற்கள் சொல் நயம் தோன்ற உள்ளது.

**மோனை நயம்**

முதல் எழுத்து ஒரே மாதிரி வருவது மோனை.
விரிகின்ற – விண்ணோங்கு, தெரிகின்ற – தெவிட்டாத

**எதுகை நயம்**

இரண்டாம் எழுத்து ஒரே மாதிரி வருவது எதுகை.
பொழிகின்ற –பொழிலில் ,புல்வெளியில் நல்வயலில்

**அணிநயம்:**

இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

**சந்த நயம்**

சிந்து சந்தத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

**சுவை: நயம்**

பெருமிதச் சுவையில் இப்பாடல் அமைந்துள்ளது.

**படிப்போம்,பயன்படுத்துவோம்!**

**இயல் -1**

Comparative Grammer-ஒப்பிலக்கணம்
Lexicon-பேரகராதி Vowels- உயிரொலிகள்
Consonants - மெய்யொலிகள்

**மொழிபெயர்க்க.**

Linguistics – மொழியியல் Literature – இலக்கியம்
Philologist – மொழி ஆய்வறிஞர்
Polyglot –பன்மொழி அறிஞர்
Phonologist –ஒலியியல் ஆய்வறிஞர்
Phonetics – ஒலியியல்

**கடிதம்**

**உங்களின் நண்பர் , பிறந்த நாள் பரிசாக அனுப்பிய " கால் முளைத்த கதைகள்"(ஆசிரியர் எஸ்.ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.**

நண்பனுக்குக் கடிதம்

10,தமிழ் நகர்,
இடம்:இஇஇ,
நாள்:---------

அன்புள்ள நண்பனுக்கு,

உன் நண்பன் எழுதும் கடிதம்.நலம் நலமறிய ஆவல். பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள் எழுதிய "கால்முளைத்த கதைகள்" என்னும் நூலைப் படித்தேன்.மிகவும் நன்றாக இருந்தது.

பழங்குடியினத்தவர்கள் சொன்ன கதைகளிலிருந்து இந்தக் கதைத் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.இதனைப் படிக்க வைத்த உனக்கு மிக்க நன்றிகள்.மீண்டும் சந்திப்போம்!

இப்படிக்கு,
----------------(பெயர்)

உறைமேல் முகவரி
பெறுநர்:
இ.இளங்கோ
12,காந்தி நகர்,
கோவை-1

***பள்ளி நேரம் முடிவதற்கு முன்பு வீட்டிற்குச் செல்ல அனுமதி வேண்டி,வகுப்பு ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.***

அனுப்புநர்
---------------------,(பெயர்)
ஒன்பதாம் வகுப்பு ......... பிரிவு,
------------------------------------ பள்ளி,
-----------------மாவட்டம்.

பெறுநர்
வகுப்பு ஆசிரியர் அவர்கள்,
ஒன்பதாம் வகுப்பு ......... பிரிவு,
------------------------------------ பள்ளி,
-----------------மாவட்டம்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

ஐயா,

பொருள் : பள்ளி நேரம் முடிவதற்கு முன்பு வீட்டிற்குச் செல்ல அனுமதி வேண்டி.

வணக்கம்.என் உடல் நலக்குறைவு ஏற்பட்டு உள்ளது.நான், இன்று 2 மணிக்கு மருத்துவமனைக்குச் செல்லவதால்பள்ளி நேரம் முடிவதற்கு முன்பே வீட்டிற்குச் செல்ல எனக்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இடம்:------------ இப்படிக்கு,

நாள்:------------ உண்மையுள்ள மாணவன்,

---------------------(பெயர்)

பெற்றோர் கையொப்பம்

**உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத்தாய் மொழி நாள்(பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.**

**உலகத் தாய்மொழி நாள் விழா**

**நிகழ்ச்சி நிரல்**

இறைவணக்கம்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை : வை.மணி (10-அ), இலக்கிய மன்றச் செயலாளர்

தலைமையுரை : அ.அருண் அவர்கள், தலைமையாசிரியர்

சிறப்புரை : கவிஞர் திரு.மு.மேத்தா அவர்கள்

நன்றியுரை : ச.மதி, 10-ஈ

நாட்டுப்பண்

**இயல் -2**

**பலவுள் தெரிக.**

1."மாடு" – என்பதன் பொருள் என்ன? **இடக்கம்**

1.நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது? **ஈ.புலரி**

**3.பொருத்தமான விடையைத் தெர்க.**

க.நீரின்றி அமையாது உலகு
 – திருவள்ளுவர்

உ.நீரின்று அமையாது யாக்கை
 – ஔவையார்

ங.மாமழை போற்றுதும்
 – இளங்கோவடிகள்

அ)க,ங ஆ)உ,ங இ)க,உ ஈ)க,உ,ங

**விடை:அ)க,ங**

4.பகுதி,விகுதி மட்டும் இடம் பெறும் சொல் எது? **இவளர்க**

5.<u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் **இவளம்**

**குறுவினா**

**1.கூவல் என்பதன் பொருள் யாது?**

உவர் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை கூவல்.

**2.உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர் நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

ஆறு,குளம்,வாய்க்கால்

**3.உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோரே – குறிப்புத் தருக.**

உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்.

**4.நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?**

- ❖ எருமைகள் நீரில்விழுவதால்,அங்கு உள்ள மீன்கள் அருகில் உள்ள பாக்கு மரங்கள் மீது பாய்கிறது.
- ❖ இது நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் ஒப்பிடுகின்றது.

**4.மணிநீரும் மண்ணும் மலையும் அணி நிழற் காடும் உடையது அரண்.இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?**

நீர்நிலை,வெற்றுநிலம்,மலை ,காடு

**சிறு வினா**

**1.அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.**

- ❖ நீரைச் சிக்கனப்படுத்த வேண்டும்.
- ❖ மழை நீரைச் சேமிக்க வேண்டும்.
- ❖ நீரை வீணாக்கக் கூடாது.
- ❖ ஏரி,குளம்,குட்டை ஆகியவற்றில் மழைநீரைச் சேமிக்க வேண்டும்.

**2.நிலைத்தபுகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?**

- ❖ உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்.
- ❖ நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்தவர் உலகில் உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்தவராவர்.
- ❖ நிலம் குழிந்த இடங்கள் தோறும் நீர்நிலை பெருகச் செய்க.
- ❖ நிலத்துடன் நீரைக் கூட்டியவர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழும் பெறுவர்.

**3.சோழர் காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப் பட்டது?**

- ❖ பயன்படுத்தத் தேவையான தண்ணீரை வெளியேற்றவும் ,
- ❖ சேற்றை வெளியேற்றவும்
- ❖ சோழர் காலக் குமிழித் தூம்பு பயன்படுத்தப் பட்டது.

**4.வானவில்லை ஒப்பிட்டுப் பெரியபுராணம் கூறும் செய்தியை விளக்கி எழுதுக.**

- ❖ நீர்நிலைகளில் எருமைகள் வீழும்.
- ❖ அதனால் நீரிலுள்ள மீன்கள் அருகில் உள்ள பாக்கு மரங்கள் மீது பாய்கிறது.
- ❖ இதற்கு வானவில்லை பெரியபுராணம் ஒப்பிடுகின்றது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**நெடுவினா**

**1.வேளாண்மை, நீரை அடிப்படையாகக் கொண்டது என்பதை விளக்குக.**

- ❖ நீர் இல்லாமல் எதுவும் உயிர் வாழ முடியாது.
- ❖ சிறிய புல்லின் நுனியைக் கூட நீர் இல்லாமல் காணமுடியாது.
- ❖ அதனால் தான் நீரின்று அமையாது உலகு என்றார் வள்ளுவர்.
- ❖ எல்லா உயிர்களுக்கும் உணவும் நீரும் அவசியமாகும்.
- ❖ மழையே பயிரும் உயிரும் வாழப் துணை புரிகின்றது.
- ❖ மழையால் விதை ஆயிரமாகப் பெருகுகிறது.
- ❖ மண் வளமாகின்றது.விதை முளைக்கின்றது. பயிர் வளர்கின்றது.
- ❖ நீரால் உழவு செழிக்கின்றது.

**2.பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.**

- ❖ காவிரி மலையிலிருந்து புதிய பூக்களை அடித்து வர,அதனை வண்டுகள் மொய்த்து ஒலி எழுப்பும்.
- ❖ காடுகளில் கரும்புகள் உள்ளன.சோலைளில் அரும்புகள் உள்ளன
- ❖ பக்கங்களில் குவளை மலர்கள் உள்ளன.
- ❖ வயல்களில் சங்குகள் கிடக்கின்றன.
- ❖ குளங்கள் எல்லாம் கடல் போல உள்ளன.
- ❖ நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்க, மீன்கள் அருகில் உள்ள பாக்கு மரங்கள் மீது பாயும்.இது வானத்தில் தோன்றி மறையும் வானவில் போன்றுள்ளது.
- ❖ நெல்கட்டுகள் , மீன்கள்,முத்துக்கள்,மலர்கள் ஆகியவற்றை கரையில் குவித்து வைத்திருந்தனர்.

**3.'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.**

**முன்னுரை**

'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கிக் காண்போம்.

**தண்ணீர் பிரச்சனை**

அது ஒரு சிற்றூர். கிணறுகளில் தண்ணீர் இல்லை. மூன்று மைல் தூரம் நடந்து சென்று பிலாப்பட்டியில் தண்ணீர் பிடித்து வரவேண்டும்.பிலாப்பட்டி மக்கள் மதியம் வரை தண்ணீர் எடுப்பார்கள். பிறகு தான் வெளியூர்க் காரர்கள் பிடிக்க வேண்டும்.

**ரயிலில் தண்ணீர்**

ரயிலில் தண்ணீர் பிடிக்கலாமென ஊர்க்காரர்கள் முடிவு செய்தார்கள்.3 மணிக்கு வரும் பயணிகள் ரயிலில் தண்ணீர்ப் பிடிக்க முடிவு செய்தார்கள். இந்திராவும் மற்ற பெண்களும் குடங்களை எடுத்துக் கொண்டு புகைவண்டி நிலையம் நோக்கி ஓடுவார்கள்.

**இந்திரா**

ஒரு நாள் இந்திராவும் தண்ணீர்ப் பிடிக்க பெட்டியில் ஏறினாள்.தண்ணீர்ப் பிடிப்பதற்குள் வண்டி கிளம்பியது. வண்டியிலிருந்து குதித்துவிடலாம் என்று நினைத்து போது வடக்கத்தியப் பெண் , இவள் தற்கொலைக்கு முயல்வதாக நினைத்து பெட்டிக்குள் இந்திராவை இழுத்துவிடுகிறாள்.

**குடும்பம் தேடுதல்**

இந்திரா வண்டியோட போய்ட்டா என்று அலறி அடித்து அம்மா , ஐயா, சின்னவன் , உறவினர் , ஊர்க்காரர்கள் தேடிச் சென்றார்கள்.இந்திராவின் அம்மா நானும் சாகிறேன் என்று ஓட இந்திரா குடத்தைத் தூக்கிட்டு வருகிறாள். மகளே இவ்வளவு நடந்தும் இத சுமந்து வரனுமா என்று ஐயா கூற, நாளைக்கு வரைக்கும் தண்ணிக்கு எங்கப் போறது என்றாள் இந்திரா.

**முடிவுரை**

தண்ணீருக்காக மக்கள் படும் துன்பத்தை அறிந்தோம்.

**வரவேற்பு மடல் எழுதுக.**

சுற்றுச்சூழலைப் பேணிக் காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

**வரவேற்பு மடல்!**

**கல்வித் தந்தையே!**

மாணவர்கள் மீது அக்கறை கொண்டவர்.எங்கள் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களை வருக!வருக! என வரவேற்கிறோம்.

**அன்பின் ஊற்றே!**

பெரியவர்,சிறியவர் என்று பார்க்காமல், அனைவரிடமும் அன்புடன் பழகுபவரே! வருக!வருக!

**நேர்மையானவரே!**

தன் பணியில் கடமை தவறாமல்,நேர்மையாக நடக்கும் உத்தமரே!வருக!வருக!

நாள் : இப்படிக்கு

இடம்: பள்ளி இலக்கிய மன்றம்

**நயம் பாராட்டுக**

கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக

கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்,
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்–பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்–மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**திரண்ட கருத்து**

காடு ,மலை குதித்து , செடிகளைக் கடந்து மேடுகள் பல ஏறி , ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்.நீர் ஊறாத ஊற்றிலும் உள்ளே புகுந்து ஓடி வந்தேன்.

**பொருள் நயம்**

**ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்** என்பதில் பொருள் நயம் சிறப்பாக உள்ளது.

**சொல் நயம்**

**குதித்து,கடந்து,நிரப்பி** ஆகிய சொற்கள் சொல் நயம் தோன்ற உள்ளது.

**மோனை நயம்**

முதல் எழுத்து ஒரே மாதிரி வருவது மோனை.

கல்லும் – கடந்து , தவழ்ந்து – தவழ்ந்து

**எதுகை நயம்**

இரண்டாம் எழுத்து ஒரே மாதிரி வருவது எதுகை.

கல்லும் – எல்லையும் , ஏறாத – ஊறாத

**அணிநயம்:**

இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

**சந்த நயம்**

சிந்து சந்தத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

**சுவை நயம்**

பெருமிதச் சுவையில் இப்பாடல் அமைந்துள்ளது.

**படிப்போம்!பயன்படுத்துவோம்!**

1.Clonical Stone - குமிழிக் கல்

2.Water Management -நீர் மேலாண்மை

3.Irrigation Technology-பாசனத் தொழில் நுட்பம்

4.Tropical Zone -வெப்ப மண்டலம்

**இயல்-3**

**பலவுள் தெரிக.**

1.பெயரடை இடம்பெறாத தொடரைக் கண்டறிக.

**இளந்த ஓவியம்**

2.முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

**ஈ.தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.**

3.பைங்கூழ் வளர்ந்தது. ஆகுபெயரின் வகையைக் கண்டறிக. **ஆ)காரியவாகுபெயர்**

4.தோரணவீதியும்,தோமறு கோட்டியும் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

**இஎண்ணும்மை**

5.பொருந்தாத தொடரைக் கண்டறிக.

**இதிருவெம்பாவையை இயற்றியவர் ஆண்டாள்.**

**குறுவினா**

**1.நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகின்றது?**

ஜல்லிக்கட்டு, ஏறு விடுதல்,மஞ்சுவிரட்டு

**2.ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் , வேறுபெயர்களைக் குறிப்பிடுக.**

1.ஏறுகோள் 2.எருதுகட்டி

**3.பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

இடம்:

முரசு கொட்டுபவன் இவ்வரியை மக்களுக்குக் கூறினான்.

பொருள் விளக்கம்:

தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புது மணலைப் பரப்புங்கள் என்று முரசு கொட்டுபவன் அறிவித்தான்.

**4.“கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன்,கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையே” இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

இடம்:

தலைவியை எழுப்பும் இடத்தில்,இவ்வரிகள் இடம் பெறுகின்றன.

பொருள் விளக்கம்:

கீச் கீச் என்று கரிக்குருவி,கீச்சாங் குருவிகள் பலவும் எழுப்பும் சத்தம் பொழுது விடிந்தது எழுந்திரு என்று தலைவியிடம் ஒருத்தி கூறுகிறாள்.

**5.“கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம் உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயே வந்த” -இவ்வடிகளில் கண்ணுக் கினியான் என்பது யாரைக் குறிக்கிறது?**

சிவபெருமானைக் குறிக்கிறது

**6.காலவாகுபெயர் – குறிப்பு தருக.**

சான்று: கார் அறுத்தான்

காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வருவதால்,இஃது காலவாகு பெயர் ஆகும்.

**சிறுவினா**

**1.ஏறுதழுவுதல் திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்துள்ளது?**

- மருத மக்களின் வேளாண்மைக்கு முக்கிய காரணமாக இருப்பது மாடுகள்.
- பாலைநிலத்தில் போக்குவரத்திற்கு மாடுகள் பயன்படுத்தப்படுகின்றது.
- முல்லை நிலத்தில் இதன் தொடர்ச்சியாக ஏறினைத் தழுவி விளையாடி மகிழ்வர்.

**2.திருப்பாவை குறிப்பிடும் காலை வழிபாட்டு நிகழ்வை விளக்குக.**

- குருவிகளின் சத்தம் பொழுது விடிந்ததைத் தெரிவிக்கின்றது.நீ இன்னும் தூங்குகிறாயே!
- பெண்கள் தயிர் கடையும் சத்தம் உனக்குக் கேட்கவில்லையா?
- உறக்கமா?நடிப்பா? கண்ணனைப் பாடும் பாடல் கேட்கவில்லை?வா! நீராடி, பாவை நோன்பு செய்வோம்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**3.உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.**

- ஊரையே!தூய்மை செய்து,வண்ணம் அடித்து,தோரணம் கட்டுவர்
- இசை ,கலை நிகழ்ச்சி ஆகியவை நடக்க ஏற்பாடு செய்வர்.
- இந்திரவிழாவுக்குத் தெருக்கள் , மன்றங்கள் ஆகியவற்றை அழகுபடுத்தினர்.
- பாக்கு , வாழை , கரும்பு நட்டு வைத்தனர்.
- எங்கும் புது மணலைப்பரப்பினர்.

**4.தோழியை எழுப்பும் நிகழ்வைத் திருவெம்பாவை எவ்வாறு காட்சிப்படுத்துகின்றது?**

- தோழி!தூங்கப் பார்க்கிறாயா?
- மார்கழி நோன்பை வீணாகக்காதே!
- அமிழ்தமாக இருக்கின்றவர், நான்மறை போற்றுவர்,இனியவர் சிவபெருமான். அவரைப் பாடி உருகிட வா!
- நாங்கள் எத்தனை பேர் என்பதைப் பார். எண்ணிக்கை குறைந்தால் நீ போய் உறங்கு!
- முடிவு உன் கையில்.

**நெடு வினா**

**1.ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விளக்குக.**

- காளைச் சண்டை ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு.
- அங்கு காளையைக் கொல்பவன் வீரன்.
- தோற்றாலும் வென்றாலும் காளைகள் சில இடங்களில் கொல்லப்படும்.
- இவை வன்மத்தையும் போர்வெறியையும் வெளிப்படுத்துவதாகவே உள்ளது.
- ஆனால் தமிழ்நாட்டில் காளைகளுக்கு எந்தத் தீங்கையும் ஏற்படுத்தக்கூடாது.
- வெற்றிபெற்ற காளைக்கும் பரிசு தருவார்கள்.

**2. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.**

- ஏறு தழுவுதல் 2000 ஆண்டுகள் தொன்மையானது.
- இயற்கை வேளாண்மையையும் கூறும் பண் பாட்டுக் குறியீடு
- விலங்குகளை முன்னிலைப் படுத்தவும் நம் முன்னோர்கள் ஏறுதழுவுதலைப் பண்பாட்டுக் கூறாகக் கொண்டிருந்தனர்.
- நாகரிகம் என்ற பெயரில் நாம் அதனை ஒதுக்காமல் அந்நிகழ்வுகளைச் செய்தல் வேண்டும்.
- ஏறுதழுவுதல் பற்றி நம் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

**3.'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.**

**முன்னுரை**

தாய்மை வறட்சி இல்லை பற்றி இக்கதை விளக்குகிறது.

**ஏழைக்குடும்பம்**

நெடுஞ்சாலையில் தோட்டம் ஒன்று இருந்தது அங்கு குடிசையில் கணவன் ,மனைவி , இரண்டு குழந்தை கள் மற்றும் இரண்டு நாய்க்குட்டிகள் வாழ்ந்தன.

**அதிகாரிகள்**

அதற்கு பக்கத்தில் உள்ள இடத்தில் அடிக்கடி அதிகாரிகள் வந்து தங்கிவிட்டுச் செல்வார்கள். இவர்கள் குடும்பம் தான் அவர்களுக்கு உதவி செய்வார்கள்.அவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொள்வார்கள்.

**மீதி பிரியாணி**

- ஒரு நாள் அதிகாரிகள் சாப்பிட்டு விட்டு மீதி பிரியாணியையும் முட்டையும் தோட்டக்காரனி டம் கொடுத்தனர்.
- மனைவிக்கு எச்சி சாப்பாட்டை வாங்குவது பிடிக்கவில்லை.
- இருந்தாலும் வறுமை காரணமாக அதை வாங்கிக் குழந்தைகளுக்குக் கொடுத்தாள்.
- தான் உண்ணாமல் நாய் குட்டிகளுக்கு மீதியைக் கொடுத்தாள்.

**முடிவுரை**

பசியிலும் தான் உண்ணாமல்,நாய்க்கும் உணவு தந்த தாய் சிறந்தவள்.

**வாழ்வியல் : திருக்குறள்**

2. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக

விடை:

| | |
|---|---|
| 1.பசுமணி கலத்துநீர் பெய்திரீஇயற்று | **சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதை போல** |
| 2.தத்தம் கருமமே கட்டளைக்கல் | **ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறிய உரைகல்** |
| 3.அனைத்தானும் ஆன்ற பெருமை | **அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும்** |

3. தீரா இடும்பை தருவது எது?

**விடை: அ) ஆராயாமைஇ ஐயப்படும்**

**குறுவினா**

**1.நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?**

தன்னை இகழ்பவரிடம் நிலம் போலப் பொறுமையைக் காக்க வேண்டும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**2.தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும். –இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.**

தீய செயல் தீமை தரும். தீயை விடக்கொடியதாக நினைத்து அஞ்ச வேண்டும்.

**3.ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர் ஒற்றினால் ஒற்றிக் கொளல் – இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.**

எதுகை நயம் : ஒற்றொற்றித் – ஒற்றினால்

மோனை நயம் : ஒற்றொற்றித் – ஒற்றினால்

**4.கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?**

செயல் வேறு, சொல் வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிக்காது.

-------------------------------------------

**தொகுப்புரை**

**பள்ளியில் நடை பெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளை திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.**

**தொகுப்புரை**

- தமிழ்த்தாய் வாழ்த்துடன் இலக்கிய மன்ற விழா காலை 9 மணியளவில் தொடங்கியது.
- தலைமை ஆசிரியர் தலைமை ஏற்று தலைமை உரை வழங்கினார்.
- அவர் தலைமை உரை வழங்கும் பொழுது மாணவர்கள் அனைவரும் கடின உழைப்பும் தன்னம்பிக்கையோடும் படிக்க வேண்டும் என்றார்.
- ஒன்பதாம் வகுப்பு மாணவர்'முயற்சி' என்னும் தலைப்பில் சிற்றுரை வழங்கினார். பேச்சுப் போட்டி –கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.
- பத்தாம் வகுப்பு மாணவர் தமிழரசன் நன்றியுரை வழங்க நாட்டுப் பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

**படிப்போம்,பயன்படுத்துவோம்!**

**Hero stone** – நடுகல்

**Embosed sculpture** – புடைப்புச் சிற்பம்

**Archaeology** – தொல்லியல்

**Excavation** – அகழாய்வு

**Cultural Identity** - பண்பாட்டு அடையாளம்

**இயல் – 4**

பலவுள் தெரிக.

1.கல்வி இல்லாப் பெண்கள் எவ்வகை நிலத்திற்கு ஒப்பானவர்கள்? **ஆ)களர் நிலம்**

2.கீழ்க் காண்பனவற்றுள் சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் சரியான குழுவினைக் கண்டறிக.

**இ)நக்கண்ணையார்,ஒக்கூர் மாசாத்தியார், நப்பசலையார்,ஔவையார்**

3.'இரு' என்பது துணை வினையாக உள்ள தொடர் எது? **ஆ)பட்டம் செய்திருக்கிறேன்**

4.சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

அ)வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.

ஆ)தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி

**விடை :4.ஆ மட்டும் சரி**

5.ஒன்றறிவதுவே உற்றிவதுவே இரண்டறிவதுவே அதனொடு நாவே – இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?

**ஆ.தொடுவுணர்வு**

**குறு வினா**

**1.சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?**

குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்காகச் சாரதா சட்டம் இயற்றப்பட்டது.

**2.துணைவினைகள் பண்புகள் இரண்டினை எழுதுக.**

துணை வினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை ஆகியவற்றை உணர்த்துகின்றன.

பேச்சுமொழியில் துணைவினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

**3."மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே" –இவ்வடிகளில் தொல்காப்பியர் குறிப்பிடும் , மூவறிவு , நான்கறிவு, ஐந்தறிவு உயிர்கள் யாவை?**

மூவறிவு உயிர்கள் : கரையான் , எறும்பு

நான்கறிவு உயிர்கள் : நண்டு , தும்பி

ஐந்தறிவு உயிர்கள் : பறவை , விலங்கு

**4.பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும் என்பதைக் 'குடும்பவிளக்கு' கருத்தின் வழி விளக்குக.**

சமைக்கும் பணி பெண்களுக்கு மட்டுமே என்ற வழக்கத்தினை நீக்க,பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும் என்கிறது குடும்பவிளக்கு.

**5.'கொடு' என்பது முதல்வினையாகவும் துணை வினையாகவும் அமையுமாறு தொடர்கள் எழுதுக.**

முதல்வினை : நான் அவருக்குப் பணம் கொடுத்தேன்.

துணைவினை:அவன் வேலை செய்து கொடுத்தான்.

**சிறுவினா**

**1.சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.**

ஔவையார் , ஒக்கூர் மாசாத்தியார் , ஆதிமந்தியார் , பொன்முடியார் , நக்கண்ணையார், காக்கைப்பாடினி, வெள்ளிவீதியார் ஆகியோர் சங்ககாலப் பெண்பாற் புலவர்களுள் சிலராவர்.

**2.சமைப்பது தாழ்வா? இன்பம் சமைக்கின்றார் சமையல் செய்வார்.**

**அ)இன்பம் சமைப்பவர் யார்?**

**இன்பம் சமைப்பவர்** :உணவைச் சமைப்பவர்

**ஆ)பாவேந்தரின் கூற்றுப் படி சமைப்பது தாழ்வா?**

பாவேந்தரின் கூற்றுப் படி சமைப்பது **தாழ்வன்று.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**3. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.**

- ❖ தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் மருத்துவர் முத்துலெட்சுமி.
- ❖ சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர்,சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற முதல் பெண்மணி.
- ❖ பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம் , குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் நிறைவேற காரணமாக இருந்தார்.
- ❖ அடையாற்றில் ஔவை இல்லம் , புற்று நோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவினார்.

**4.நீலாம்பிகை அம்மையாரது தமிழ்ப் பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.**

- ❖ மறைமலையடிகளின் மகள் நீலாம்பிகை அம்மையார்.
- ❖ தனித்தமிழ்ப் பற்றுடையவர்.
- ❖ முப்பெண்மணிகள் வரலாறு , பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் எழுதியுள்ளார்.

**நெடுவினா**

**1.நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.**

**முதல் பெண் ஆசிரியர்**

பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர சாவித்திரிபாய் பூலே. இவரே இந்தியாவின் முதல் பெண் ஆசிரியராவார்.

**மருத்துவர் முத்துலட்சுமி**

- ❖ தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.
- ❖ அடையாறில் அவ்வைஇல்லம்,புற்றுநோய் மருத்துவமனை நிறுவினார.
- ❖ பெண்களுக்கு சொத்துரிமமைச் சட்டத்திற்குப் பாடுபட்டார்.

**நீலாம்பிகை அம்மையார்**

தனித்தமிழ் கட்டுரை ,வடசொல் தமிழ் அகராதி , முப்பெண்மணிகள் வரலாறு,பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

**2.குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண் கல்விக்கான கருத்துக்களை இன்றைய சூழலில் ஒப்பிடுக.**

- ❖ கல்வியறிவில்லாத பெண்கள் பயன்படாத நிலம் போன்றவர்கள்.
- ❖ கல்வி அறிவு இல்லாத பெண்களின் குழந்தைகள் சிலர் தீய பழக்கங்கள் செய்கின்றனர்.
- ❖ கல்வி அறிவுள்ள பெண்கள் நல்ல நிலத்தைப் போன்றவர்கள்.
- ❖ இன்று கல்வி கற்ற பெண்களின் குழந்தைகள் பலர் நல்ல பழக்கங்களை கற்றுஉயர்ந்து இருக்கின்றனர்.

**3.நூலகம் , நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத் துகள் யாவை?**

**முன்னுரை**

நூலகம், நூல்கள் குறித்து அண்ணா கூறியுள்ளவற்றைக் காண்போம்.

**நூலகம்**

- ❖ சிறிய கடை அளவிற்கு உடைகளையும் மருந்துகளையும் வைத்துஇருக்கிறோம்.
- ❖ அடிப்படைத் தேவைக்கு அடுத்தபடியாக நூலகம் வீட்டில் இருக்க வேண்டும்
- ❖ ஆனால் நாம் நூலகத்தை வீட்டில் வைத்திருப்பதில்லை.
- ❖ வீட்டில் நூலகம் அமைக்க வேண்டும்

**நூல்கள்**

- ❖ வரலாறு , புவியியல், அறிவியல் கண்டுபிடிப்புகள்,அறிஞர்கள் ஆகிய நூல்கள் வீட்டுநூலகத்தில் வைக்கவேண்டும்.
- ❖ திருக்குறள் வீட்டில் கட்டாயம் இருக்க வேண்டும்.
- ❖ தலைவர்கள் பற்றிய நூல்கள் இருக்க வேண்டும்.

**முடிவுரை**

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூலகம் வைக்க வேண்டும்.

**படிப்போம்... பயன்படுத்துவோம்!**

1.Social Reformer- சமூக சீர்திருத்தவாதி

2.Volunteer -தன்னார்வலர்

3.Saline Soil - களர்நிலம்

4. Ocean - **பெருங்கடல்(அ) மாக்கடல்**

5. Auxilliary Verb -**துணைவினை**

**இயல் – 5**

**பலவுள் தெரிக**

1.பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று--- **அ.மாமல்லபுரம்**

2.'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி **இ)முல்லை**

3.இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும் என்பதற்கு எடுத்துக்காட்டு- **ஆ)தைத்திங்கள்**

4.திருநாதர்குன்றில் ஒருபாறையில் படைப்புச் சிற்பங் களாக உள்ளவை-----**ஆ)தீர்த்தங்கரர் உருவங்கள்**

5."வசிபட முதுநீர் புக்குமலையெனத் துவரை நன்னீர் " – பாடல் அடிகளில் முந்நீர் என்பது எது? **ஆ)கடல்நீர்**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**குறு வினா**

**1.நடுகல் என்றால் என்ன?**

போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரரின் நினைவாக, அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பட்ட கல் ஒன்றினை நடுவது நடுகல் ஆகும்.

**2.இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப் பட்டன?**

இசைத் தூண்கள் விஜய நகர மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டன.

**3.இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகுந்து வருவதைச் சான்றுடன் விளக்குக.**

இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' ஆகும். இவை வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்.

சான்று:அவருக்குக் கொடு

**4.உரிய இடங்களில் வல்லின மெய்களைச் சேர்த்து எழுதுக.**

பிறநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டுச் சிற்பங்கள் தனித்தன்மையுடன் திகழ்கின்றன.யோகக் கலை,நாட்டியக் கலைக் கூறுகளும் தமிழ்நாட்டுச் சிற்பக் கலையில் இடம் பெற்றுள்ளன.

**5.பூக்கும் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

பூக்கும் =பூ+ க் +க் +உம்

பூ – பகுதி

க் –சந்தி

க் – எதிர்கால இடைநிலை

உம் – வினைமுற்று விகுதி

**சிறுவினா**

**1.முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?**

- உருவத்தின் முன் , பின் பகுதிகள் தெளிவாக முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்கள் முழு உருவச்சிற்பங்கள்.
- உருவத்தின் முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள்.

**2.நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?**

- விழியோட்டம் , புருவ நெளிவு , நகஅமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலைநயத்துடன் **நாயக்கர் காலச் சிற்பங்களில்** அவை அமைக்கப்பட்டுள்ளன.

**3.எண்ணுப்பெயர்,திசைப்பெயர்களில் வல்லினம் மிகுந்து வருவதைச் சான்றுடன் விளக்குக.**

- எட்டு,பத்து ஆகிய எண்ணுப்பெயர்களில் வல்லினம் மிகும்.
- சான்று:எட்டு+தொகை – எட்டுத்தொகை, பத்து+பாட்டு –பத்துப்பாட்டு
- திசைப்பெயர்களில் வல்லினம் மிகும்.
- சான்று:கிழக்கு+பகுதி –கிழக்குப் பகுதி, வடக்கு+பக்கம்–வடக்குப்பக்கம்

**4குறிஞ்சி மணப்பதற்கான நிகழ்வுகளைக்குறிப்பிடுக.**

- தீயில் இட்ட சந்தன மரக்குச்சிகள் , அகில் இவற்றின் நறுமணம்.
- நெல்லரிசிச் சோற்றின் மணம்.
- காந்தள் மலரின் மணம்.
- எங்கும் வீசியதால் குறிஞ்சி நிலம் எங்கும் மணக்கின்றது.

**5.இராவண காவியத்தின் வழியே மருத நிலத்தின் அழகைப் புலவர் குழந்தை எங்ஙனம் காட்சிப் படுத்துகிறார்?**

- ஆறும் குளத்து நீரும் காட்டாறும் மருத நிலத்தில் பாயும்.
- நெற்பயிரினைக் காக்க கரும்பு நிற்கும்.
- வரும் நீரைக் கால்வாய் வழி வயலில் தேக்கி வளம் பெருகும்.
- வயலில் காஞ்சி,வஞ்சி மலர்கள் பூக்கும்.

**நெடு வினா**

**1.தமிழ் நாட்டுச் சிற்பங்கள் கலை நயம் மிக்கனவாக வும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.**

மாமல்லபுரச் சிற்பங்கள் பெரும்பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பஞ்சபாண்டவர்கள் இரதத்தில் உள்ள சிற்ப வேலைப் பாடுகள் அழகாக உள்ளன.

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படும் 14 அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும், நந்தியும் வியப்பூட்டும் படி உள்ளது.

நாயக்கர் மன்னர்கள் சிற்ப வேலைப்பாடுடன் ஆயிரங்கால் மண்டபத்தை அமைத்தனர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரம் கால் மண்டபத்து தூண்களில் கண்ணப்பர்,குறவன்,குறத்தி, ஆகியவற் றில் ஆடை ஆபரணங்கள் கலைநயத்துடன் காணப் படுகின்றன.

கோவை பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் விழியோட்டம் , புருவ நெளிவு , நகஅமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை அமைக்கப் பட்டுள்ளன.

**2.இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரி.**

**மருதம்**

- ஆறும் குளத்து நீரும் காட்டாறும் மருத நிலத்தில் பாயும்.
- நெற்பயிரினைக் காக்க கரும்பு நிற்கும்.
- வரும் நீரைக் கால்வாய் வழி வயலில் தேக்கி வளம் பெருகும்.
- வயலில் காஞ்சி,வஞ்சி மலர்கள் பூக்கும்.

**குறிஞ்சி**

- தீயில் இட்ட சந்தன மரக்குச்சிகள் , அகில் இவற்றின் நறுமணம்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- நெல்லரிசிச் சோற்றின் மணம்.
- காந்தள் மலரின் மணம்.
- எங்கும் வீசியதால் குறிஞ்சி நிலம் எங்கும் மணக்கின்றது.

**3.இசைக்கு நாடு , மொழி , இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி'க் கதையின் மூலம் விளக்குக.**

**முன்னுரை**

இசைக்கு நாடு , மொழி , இனம் தேவையில்லை என்பதை இக்கதையில் காண்போம்.

**செய்தி**

- இசை நிகழ்ச்சியில் தமிழ்நாட்டு நாதசுவர வித்வானும் பிலிப் போல்ஸ்கா என்ற வெளிநாட்டுக் கலைஞரும் வந்திருந்தனர்.
- நாதஸ்வர வித்வான்; வாசிக்கத் தொடங்கினார்.நாதஸ்வர இசைஆரம்பித்தது.
- போல்ஸ்கா தன்னையே இழந்து இரசிக் கின்றார். வித்துவானின் சாமாராகம் அனைவரையும் மயங்கச் செய்தது.
- வித்வானிடம் சாந்தமுலேகாவை பல முறை வாசிக்கக் கேட்டு மகிழ்ந்தார்.
- இதில் ஒரு செய்தி இருப்பதாகவும் , ஏதோ ஒரு உலகத்தில் இருந்து வந்த செய்தி கேட்கிறது என்றார் போல்ஸ்கா.
- அது தமிழ் இசையின் செய்தி. வேறு எந்த இசையும்; இதனைக் கொடுக்கவும் இல்லை. அதனை நான் வாங்கிக் கொண்டேன்.

**முடிவுரை**

இக்தை இசைக்கு நாடு , மொழி , மதம் என எதுவும் இல்லை என்பதை உணர்த்துகிறது.

**வாழ்வியல்: திருக்குறள்**

1.பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

விடை

பகைவரையும் நட்பாக்கும் கருவி – மாற்றாரை மாற்றும் படை

தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான் – கண் டானாம் தான்கண்ட வாறு

அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும் – அறம் நாணத் தக்கது உடைத்து

2.ஐந்து சால்புகளில் இரண்டு

**ஆ) நாணமும் இணக்கமும்ஆ**

அ. அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள் ---------------- விடை :ஒப்புரவு

ஆ. உலகத்துக்கு அச்சாணி போன்றவர் ---------------------- விடை :உழவர்

இ. தான் நாணான் ஆயின் ------------- நாணத் த க்கது. விடை: அறம்

ஈ. ஆழி என்பதன் பொருள்----------- விடை:கடல்

உ. மாற்றாரை மாற்றும் ----------- விடை :படை

ஊ. ஒழுக்கமான குடியில் பிறந்தவர் ---------- செய்வதில்லை. விடை : தவறு

வினாக்கள்

**1.'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்துசால்பு ஊன்றிய தூண்கல்**

**இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

பயின்று வரும் அணி : ஏகதேச உருவக அணி

இலக்கணம் : செய்யுள் பொருட்களில் ஒன்றினை உருவகம் செய்து , மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

விளக்கம் : சான்றாண்மையைத் தாங்கும் தூண்களை உருவகம் செய்தவள்ளுவர்,சான்றாண் மையை உருவகம் செய்யாமல் விட்டதால், இஃது ஏகதேச உருவக அணி.

**2.உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?**

உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் : உழவர். அவரே மற்ற தொழில் செய்பவரையும் தாங்கி நிற்கிறார்.

3.காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான் கண்டனாம் தாம்கண்ட வாறு. தொடைநயத்தை விளக்குக

எதுகைத்தொடை: இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

காணாதான் – காணாதான்

தான்காணாதான் – கண்டனாம்

மோனைத்தொடை: முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.

காணாதான் – காணாதான்

தான்காணாதான் – தாம்கண்ட

**படிப்போம் ,பயன்படுத்துவோம்!**

Cave temple - குடைவரைக் கோவில்

Treasury - கருவூலம் Sculpture-சிற்பம்

Statue-சிலை Embossing -புடைப்பு

## இயல் – 6

**பலவுள் தெரிக.**

1.சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

**இ)அடிசில் – சோறு**

2.தேமாங்கனி என்பது --------------- ஆகும்.

**ஈ)உவமைத்தொகை**

3.தவிர்த்தலின்றிக் காவல் செய்யும் பாதுகாவலர் ஆயிரம் பேர் உள்ளது------**ஆ)ஏமாங்கத நாடு**

4.கூற்று – இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான் , 'இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்தான்' என்றார்.

காரணம் – இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுசேர்த்த பெருமைக்குரியவர்கள் தமிழர்கள்.

**அ.கூற்று சரி காரணம் சரி**

5.ஆடுகளம் – இச்சொல்லில் வல்லினம் மிகாது என்பதற்கான காரணம் யாது?

**இ)வினைத்தொகையில் வல்லினம் மிகாது.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**குறு வினா**

**1.இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழர்கள் யாவர்?**

பசும்பொன் முத்துராமலிங்கனார்,ஜானகி ,இராஜா மணி,கேப்படன் லட்சுமி,சிதம்பரம் லோகநாதன்

**2.தாய்நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்?ஏன்?**

நான் தாய்நாட்டுக்காக உழைக்க ஆசிரியர் பணியைத் தேர்ந்தெடுப்பேன்;

காரணம் : நல்ல சமுதாயத்தை உருவாக்குவதற்காக.

**3.கருக்கொண்ட பச்சைப் பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?**

நெற்பயிர்களின் தோற்றத்திற்குக் கருக்கொண்ட பச்சைப் பாம்பு உவமையாக்கப்பட்டுள்ளது.

**4.'ஓம்புவார்' – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

ஓம்புவார் – ஓம்பு +வ் +ஆர்

ஓம்பு – பகுதி

வ் – எதிர்கால இடைநிலை

ஆர் –பலர்பால் வினைமுற்று விகுதி

**5.இந்திய தேசிய இராணுவப் படைத் தலைவராக இருந்த தில்லான் அவர்கள் தமிழர்கள் பற்றிக் கூறியது யாது?**

இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள் தான்" என்றார்.

**6.'மகனே கொடு' இத் தொடரில் வல்லினம் மிகுமா? விளக்கம் தருக.**

- ❖ வல்லினம் மிகாது.
- ❖ விளிவேற்றுமையில் வல்லினம் மிகாது.

**சிறு வினா**

**1.குறிப்பு வரைக– "டோக்கியோ கேடட்ஸ்"**

- ❖ இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு , வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக , ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
- ❖ அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர் தான் டோக்கியோ கேடட்ஸ்.

**2.பனியிலும் , மலையிலும் எல்லைக் காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் பள்ளிக் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.**

நாட்டுச் சேவைக்காகவே பணியாற்றி வரும் ஒரே துறை இராணுவத் துறை.புயல்,நிலநடுக்கம் ஆகியவற்றை பொருட்படுத்தாமல் எதிரிகளிடமிருந்து நாட்டையும் நம்மையும் காக்கிறார்கள்.அவர்களை போற்றி வாழ்த்துவோம்.

**3.ஏமாங்கத நாட்டின் புகழ் உலகின் பல திசைகளிலும் எப்படிப் பரவியுள்ளது என்பதைத் திருத்தக்க தேவர் எங்ஙனம் கூறுகின்றார்?**

- ❖ தென்னை மரத்திலிருந்து காய் விழுகின்றது.
- ❖ அது ,பாக்குமரத்திலுள்ள தேன் கூட்டை கிழித்து, பலாப்பழத்தைப் பிளந்தது.
- ❖ மாங்கனியைச் சிதற வைத்து ,
- ❖ வாழைப்பழத்தை உதிரச் செய்தது.
- ❖ இந் நாட்டின் புகழ் உலகின் பல திசைகளிலும் பரவியிருந்தது.

**4.ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக் கணக்கில் இருப்பதாகத் திருத்தக்க தேவர் பாடியுள்ளார்?**

- ❖ வகையான உணவுகள் ஆயிரம்
- ❖ அறச்சாலைகள் ஆயிரம்
- ❖ மகளிர் ஒப்பனை செய்துகொள்ள மணி மாடங்கள் ஆயிரம்.
- ❖ கம்மியர் ஆயிரம் பேர் ,
- ❖ திருமணங்கள் ஆயிரம்,
- ❖ பாதுகாவலரும் ஆயிரம் பேர் இருப்பதாகத் திருத்தக்கதேவர் கூறுகின்றார்.

**நெடு வினா**

**1.இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள்; தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.**

- ❖ பசும்பொன் முத்து ராமலிங்கனார் தமிழகத்திலிருந்து பெரும் படையைத் திரட்டி, இந்திய இராணுவத்திற்கு வலுசேர்த்தார்.
- ❖ இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி .
- ❖ இப்படையில் தலைசிறந்தவர்களாக ஜானகி , இராஜாமணி ஆகியோர் விளங்கினர்.
- ❖ நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி , சிதம்பர லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள்.
- ❖ வான்படைப்பிரிவு டோக்கியோ கேடட்ஸ். இதில் பெரும்பாலானோர் தமிழர்கள்.
- ❖ அதில் சிறந்து விளங்கியவர் கேப்டன் தாசன்

**2.ஏமாங்க நாட்டு வருணணைகளை நும் ஊர் குறித்த வளங்களோடு ஒப்பிடுக.**

- ❖ தென்னை மரத்திலிருந்து காய் விழுகின்றது.
- ❖ அது ,பாக்குமரத்திலுள்ள தேன் கூட்டை கிழித்து, பலாப்பழத்தைப் பிளந்தது.
- ❖ மாங்கனியைச் சிதற வைத்து ,
- ❖ வாழைப்பழத்தை உதிரச் செய்தது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- ❖ இந் நாட்டின் புகழ் உலகின் பல திசைகளிலும் பரவியிருந்தது.

**எங்கள் ஊர்**

எங்கள் ஊரில் வயலில் தென்னை மரங்கள் அமைந்துள்ளன.அதில் உள்ள காய்கள் வயல் விழுகின்றது. மாமரங்கள் நிறைய உள்ளன.மாங்கனிகள் காற்றில் எல்லா இடங்களிலும் விழுகின்றது.

**3.இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.**

**முன்னுரை**

இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளைக் காண்போம்.

**இந்திய விண்வெளித்துறை**

- ❖ பெங்களூரில் இந்திய விண்வெளி ஆய்வு மையம் உள்ளது.
- ❖ இதன் தலைவராக கே.சிவன் உள்ளார்.
- ❖ இஸ்ரோ இதுவரை 45 செயற்கைக்

கோள்கள் விண்ணில் நிலைநிறுத்தியுள்ளது.இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் உலகின் மிகப் பெரிய விண்வெளி ஆய்வு மையத்தில் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளது

- ❖ முதல் செயற்கைக் கோள் ஆரியப்பட்டா ரஷ்யாவின் உதவியால் செலுத்தப்பட்டது.
- ❖ 2008ல் சந்திராயன்–1 நிலவை நோக்கி விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது.

**சித்தாரா செயலி**

சித்தாரா செயலி செயற்கைக்கோள் ஏவுஊர்தி பற்றிய முழுவிவரங்களையும் சேகரிக்கும்.கல்லைத் தூக்கி வீசும் போது,அது விழும் திசை , கோணம் , நேரம் , அழுத்தம் ஆகியவற்றைத் தெரிவிப்பது சித்தராவின் பணியாகும்.

**நேவிக் செயலி**

நேவிக் என்ற செயலி மீனவர்கள் கடலின் எல்லை தாண்டினால் இச்செயலி எச்சரிக்கும்.மீன்கள் அதிகம் உள்ள பகுதியைக் காட்டும்.

**முடிவுரை**

இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளைக் கண்டோம்.

**கட்டுரை**

**எனது பயணம் என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.**

**முன்னுரை**

எனது பயண அனுபவம் பற்றிய சுவையான செய்திகளைத் தருகின்றேன்.

**தொடர் வண்டிப்பயணம்**

ஈரோட்டில் தொடர் வண்டி நிலையத்திலிருந்து கோவை அதிவிரைவு வண்டியில் கிளம்பினோம். சேலம் , திருபத்தூர் , வாணியம்பாடி , அரக்கோணம் ஆகிய ஊர்களை எல்லாம் வண்டி கடந்து வந்தது. மரங்களும் மலைகளும் வேகமாக ஓடின.

**சென்னை**

- ❖ சென்னையில் இறங்கி வள்ளுவர் கோட்டம் சென்றோம்.
- ❖ பிறகு மெரினா கடற்கரை சென்றோம்.கடலின் காட்சி கவின்மிகு காட்சியாக இருந்தது.
- ❖ பிறகு கன்னிமாரா நூலகம் சென்றோம். மாமல்லபுரம் சென்றோம்.
- ❖ சிற்பங்களின் கலையழகில் மூழ்கினேன்.

**திரும்புதல்**

மீண்டும் தொடர் வண்டி மூலம் அடுத்த நாள் இரவு ஈரோடு வந்தோம்.

**படிப்போம்!பயன்படுத்துவோம்!**

Martyrs - உயிர்த்தியாகம் செய்தவர்கள்
Combination- புணர்ச்சி
Indian National Army -இந்திய தேசிய இராணுவம்
Patriotism - நாட்டுப் பற்று
World War - உலகப் போர்

**இயல் – 7**

பலவுள்தெரிக.

1.சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

கூற்று – பெரியார் உயிர் எழுத்துக்களில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும் , 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

காரணம் – சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

**ஆ. கூற்று காரணம் சரி**

2.'காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது' – இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது? **ஈ)பிறப்பு**

3.விடுபட்ட இடத்திற்கான விடை எது?

"இளையவர் கூட்டம் ஏந்தி நடக்க--------- புதியவை தாம்" **ஆ)இனமும் மொழியும்**

4.பெரியார் என்றவுடன் நம் நினைவுக்கு வருவது---- **ஆ)பகுத்தறிவுக் கொள்கை**

5.போக்குக என்ற சொல்லின் பகுதி– **இ)போக்கு**

**குறுவினா**

**1.பகுத்தறிவு என்றால் என்ன?**

அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன் ? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்பி , அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும்.

**2.மூவசைச் சீரில் அமைந்த பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

சுப் ரம ணி : நேர் நிரை நேர் –கூவிளங்காய்
சுப லட் சுமி : நிரை நேர் நேர் – புளிமாங்காய்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**3.யாருக்கு பூமி பாரமில்லை என்று கவிஞர் குறிப்பிடுகின்றார்?**

முளைக்கும் விதைகள் விதைக்கத் துடித்தால், பூமி பாரமில்லை.

**4.யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?**

யசோதரன்

**5.அசை எத்தனை வகைப்படும்?அவை யாவை?**

அசை இரண்டு வகைப்படும்.1.நேரசை 2.நிரையசை

**சிறுவினா**

1.சிக்கனம் குறித்து பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்பு படுத்தி எழுதுக

- சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- விழாக்கள் ,சடங்குகளால் மூடப்பழக்கம் வளர்வதோடு , வீண்செலவும் ஏற்படுவதால் தேவையற்ற விழாக்கள் மற்றும் சடங்குகளைத் தவிர்க்க வேண்டும் என்றார் பெரியார்.
- சிக்கனமாக வாழாத குடும்பங்கள் இன்று கடனாளிகளாய் துன்பப்பட்டு கொண்டு இருக் கின்றன..

**2.நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை ?**

செயலைச் செய்வதென்றால் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்.
தீய பண்புகளை நீக்க வேண்டுமாயின் முதலில் கோபத்தை நீக்க வேண்டும்.
ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்.
போற்றிக் காக்க வேண்டுமென்றால் நன்னெறியினைக் காக்க வேண்டும்.

**3.'ஓ,என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?**

- அறிவியல் என்னும் ஊர்தியில் அனைத்தையும் ஆளும் தமிழை நிலை நிறுத்துங்கள்.
- சோழன் கரிகாலனின் பெரும் புகழைக் கணினியுள்ளே வையுள்ளுங்கள்.
- மக்களின் இனத்தை மாற்றுங்கள்.
- ஏவுகணையில் தமிழை எழுதி அனைத்துக் கோள்களிலும் ஏற்றுங்கள்.

4."சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" – அலகிட்டு வாய்பாடு கூறுக.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| சுழன்/றும்/ஏர்ப்/ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பின்/னது/ | நேர் நிரை | கூவிளம் |
| உல/கம்/ | நிரை நேர் | புளிமா |
| அத/னால் / | நிரை நேர் | புளிமா |
| உழந்/தும் / | நிரை நேர் | புளிமா |
| உழ/வே/ | நிரை நேர் | புளிமா |
| தலை/ | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்'என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

**நெடு வினா**

**1.மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.**

- இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ற நூல்களை தமிழில் எழுத வேண்டும்.
- பழைய எழுத்து முறைகள் அச்சுக் கோர்ப்பதற்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தியது.
- அவற்றைப் போக்க எழுத்துச்சீர திருத்தம் செய்தார்.
- பகுத்தறிவு தன்மைகளை உண்டாக்க வேண்டும்.
- ஐ என்பதை அய் எனவும், ஔ என்பதை அவ் எனவும் சீரமைத்தார்.

**2.மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச்செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை**

கவிஞர் நா.முத்துக்குமார் அவர்கள் தன் மகனுக்கு எழுதிய கடிதத்தின் கருத்துகளைக் காண்போம்.

**கடிதக் கருத்துகள்**

- உலகம் இப்படித்தான் அழ,சிரிக்க,,சிணுங்க வேண்டும் என்பதை உனக்குக் கற்பிக்கிகின்றது.
- வாழ்க்கையில் விழ வேண்டும்.பிறகு எழ வேண்டும். வாழ்க்கை முழுக்க இந்த நாடகத்தைத் தான் நீ வெவ்வேறு வடிவத்தில் நடிக்க வேண்டும்.
- கல்வியில் தேர்ச்சி கொள்.அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக் கொள்.தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதை விட , தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும்.
- மாநகரத்தில் வாழும் நீ கொடிய பல தேள் பல வடிவத்தில் இருக்கும்.அவற்றின் மத்தியில் வாழக் கற்றுக்கொள்.
- கிடைத்த வேலையை விட , பிடித்த வேலையைச் செய். கடன் வாங்கியாவது உதவி செய்.அதில் கிடைக்கும் மகிழ்ச்சி அதிகமானது.
- எல்லா உறவுகளையும் விட மேலானது நட்பு மட்டுமே , நல்ல நண்பர்களைச் சேர்த்துக் கொள். உன் வாழ்க்கை நேராகும்.

**முடிவுரை**

எதிர்காலத்தில் உன் கண்ணீர் துளியில் வாழ்ந்து கொண்டு இருப்பேன் நான் என்று கடிதத்தை நிறைவு செய்கிறார் நா.முத்துகுமார்.

---

**படிப்போம்!பயன்படுத்துவோம்!**

Reforming the Letters - எழுத்துச் சீர்திருத்தம்
Font - எழுத்துரு
Cognitive - அறிவுசார்
Diversified - வேறுபட்ட
Philosophy -மெய்யியல்(தத்துவம்)

---



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் –தமிழ்– ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.**

அனுப்புனர்

------,(பெயர்)
10,பாரதி நகர்,
------------(ஊர்)

பெறுனர்

நெய்தல் பதிப்பகம்
சென்னை–5

ஐயா,

பொருள் : அகராதிகள் வாங்குதல் தொடர்பாக..

வணக்கம். **எங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ்–ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு** கேட்டுக்கொள்கின்றேன்.உரிய பணத்தினை வங்கியில் செலுத்தியுள்ளேன்.அதன் நகல் இணைத்துள்ளேன்.நன்றி!

இடம்: இப்படிக்கு,
நாள்: --------(பெயர்)

உறைமேல் முகவரி

பெறுனர்
நெய்தல் பதிப்பகம்
சென்னை–5

பொதுக்கட்டுரை
மழைநீர் சேமிப்பு

முன்னுரை

மழைநீர் சேமிப்பு பற்றியும், இதன் பயன்கள், சேகரிக்கும் முறை பற்றியும் இனிக் காண்போம்.

மழைநீர் சேமிப்பு

மேகம் மழை பொழிந்து நீரை நமக்குக் கொடுக்கிறது.அந்த நீரை நாம் சேமிக்க வேண்டும்.அதுவே மழைநீர் சேமிப்பு எனப்படும்.

சேமிக்கும் முறை

1.வீட்டின் மீது விழும் மழைநீரைக் குழாய்கள் மூலம் மழைநீர் சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கலாம்.
2.ஏரி , குளம் , கிணறு ஆகியவற்றில் மழைநீரைச் சேமிக்கலாம்.

பயன்கள்

குடிநீராகப் பயன்படும்.
நிலத்தடி நீர் மட்டம் உயரும்.
வறட்சி குறையும்.

மரம் வளர்ப்போம்

1.மரத்தை வெட்டுவதால் மழை குறைகிறது.
2.எனவே, நாம் மரத்தை வெட்டக் கூடாது.
3.மழை அதிகமாக நாம் மரம் வளர்க்க வேண்டும்.
4.நாம் ஒவ்வொருவரும் வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும்.

முடிவுரை

அனைவரும் மழைநீரைச் சேமிப்போம்! அனைவரும் மரம் வளர்ப்போம்!

நூலகம்

முன்னுரை

நூலகத்தைப் பயன்படுத்தும் முன் நூலகத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

நூலகத்தின் தேவை

பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்கவும் நூல்களை இலவசமாகப் படிக்கவும் குறிப்பெடுக்கவும் நூலகம் தேவைப்பட்டது.

வகைகள்

மாவட்ட மைய நூலகம், மாவட்ட கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம் ,எனப் பலவகை நூலகங்கள் உள்ளன.

நூலகத்தில் உள்ளவை

கதை ,கவிதை, கட்டுரை , அறிவியல் நூல்கள், வார இதழ்கள் ,மாத இதழ்கள் ஆகியவை நூலகத்தில் உள்ளன.

படிக்கும் முறை

நூலகத்தில் நூல்களை எடுத்து அமைதியாகப் படிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் படிக்க அமர்ந்து வேண்டும். நூல்களைக் கிழிக்கவோ, சேதப்படுத்துவதோ கூடாது .

முடிவுரை

நூலகம் தேடிச் சென்று, நாடி நூல்களைப் படிப்போம் உயர்வோம்.

***பெண்கல்வி (அல்லது) பெண்கள் முன்னேற்றம்***

**முன்னுரை**

“மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா “ என்றார் கவிமணி. அத்தகைய சிறப்பு மிக்க இனம் பெண்ணினம்.

**பெண்ணின் சிறப்பு**

மொழி , நாடு , மண் , ஆறு , இறைவன் ஆகிய அனைத்தும் பெண்கள்.பாரதியும் , பாரதிதாசனும் , பெரியாரும் போற்றிய பெருமைக்குரியவள் பெண்.

**பெண்ணடிமை**

அச்சம் , மடம் , நாணம் , பயிர்ப்பு ஆகிய நான்கும் பெண்ணுக்குரியது என்று கூறி பெண்ணை அடிமைப்படுத்தினர்.சமைப்பதும் , குழந்தை பெறுவதும் பெண்ணுக்குரியதாய் கூறி அடிமைப்படுத்தினர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**பெண்கல்வி**

ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்றார் பாரதி. பெண்கட்கு கல்வி வேண்டும் என்றார் பாரதிதாசன். திரு.வி.க., காந்தியடிகள் , பெரியார் ஆகியயோர் பெண்கல்விக்குக் குரல் கொடுத்தனர்.

**பெண் முன்னேற்றம்**

இந்திரா காந்தி , அன்னை தெரஸா ,கிரண்பேடி , கல்பனா சாவ்லா , சுனிதா வில்லியம்ஸ் , பாத்திமா பீவி ஆகிய பெண்கள் கல்வியால் சிறந்து பெருமை பெற்ற பெண்கள்.

**முடிவுரை**

இன்று பெண்கல்வி வளர்ந்து வருகின்றது. பெண்கள் கல்லாத நிலை இல்லை என்பது உருவாக வேண்டும்.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.(அனைத்துப் படங்களுக்கும்)**

**சின்ன சின்ன ஓவியம்**

**சிங்காரமான ஓவியம்**

**வண்ண வண்ண ஓவியம்**

**வளமான ஓவியம்**

**சொல்ல சொல் காவியம்**

**சொற்குவியலானஓவியம்**

**சிந்தனைக்கு ஓவியம்**

**சிறப்பான ஓவியம்**

அதுவே இந்த ஓவியம்

**ஆக்கம்**

**ச.சேட்டு மதார்சா,ப.ஆ.**

**ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,ஈரோடு.**

ச.சேட்டு Padasalai.Net